# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

**எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032**

**தொலைபேசி 044-22201337**

**மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in**

**இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in**


முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 82/மா/2024**

**நாள் 29.11.2024**

திரு.S.கிருபாகரன், தஞ்சாவூர். ............. முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தஞ்சாவூர் மாநகராட்சி. ............. எதிர் மனுதாரர்

தஞ்சாவூர், பாண்டியன் நகர், M.C.ரோடு, கதவு எண்.5/31, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.கிருபாகரன் என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2024அன்று பெறப்பட்டு, 82/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர், பாண்டியன் நகர், M.C.ரோடு, கதவு எண்.5/31, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.கிருபாகரன் என்பவரின் நாளிடப்படாத மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“2018 முதல் தஞ்சாவூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக உள்ளேன். தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று 23.12.2019 அன்று 20.01.2020 தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் முன் அனுமதி நாள் 22.01.2020 அருள்மிகு பெருவுடையார் திருக்கோவில் திருகுடமுழுக்கு விழா முன்னிட்டு தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பிரதான சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகளில் பொதுமக்கள் எளிதில் அறிந்துக் கொள்ளும் வகையில் சாலை குறியீடுகள் (Thermo Plastic Road Marking) அமைக்கும் பணிகள் செய்தேன். அதற்குண்டான தொகை ரூ.20.00 இலட்சம் ஆகும். Bill process தொகை ரூ 17,27,701/—ஐ 20.07.2021 வருவாய் நிதியில் ஒதுக்கீடு செய்தார்கள். முன்னாள் ஆணையர் திரு.சரவணக்குமார் அவர்களிடம் பலமுறை மனு கொடுத்தும் பணம் கிடைக்கவில்லை. தற்போது உள்ள ஆணையர் அவர்களிடம் 18.10.2023 மற்றும் 07.12.2023 அன்று கடிதம் கொடுத்தும் எனக்கு பணம் வழங்கப்படவில்லை. 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் மிகவும் மன வேதனை அடைந்துள்ளேன். மேலும் தஞ்சாவூர் மாநகராட்சியின் தகவல் மையத்தில் பலமுறை கடிதம் கொடுத்தும் எனக்கு பணம் வழங்கப்படவில்லை. இதனிடையில் Smart City திட்டத்தின் கீழ் இரண்டு பூங்கா வேலை செய்தேன். அதற்குண்டான முன் வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகை DD Bank Deposit தொகையும் வழங்கப்படவில்லை. இத்துடன் வேலை உத்தரவாத நகல் மற்றும் Deposit Copy, DD copy, Bill Process Copy, முன் வைப்புக்கான டெபாசிட் நகல் இணைத்துள்ளேன். விவேகானந்தா நகர், பெரிய கோவில் குடமுழுக்கு விழா கூடுதலாக 6% GST வழங்கிடவும் தஞ்சாவூர் மாநகராட்சியிடமிருந்து வர வேண்டிய முன் வைப்புத்தொகை, கூடுதல்

முன்வைப்புத் தொகை மற்றும் செயல் திறன் பாதுகாப்பு நிலுவை தொகையினையும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) திரு.S.கிருபாகரன் மனு தொடர்பாக அறிக்கை அனுப்பிட தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 18.01.2024 நாளிட்ட கடிதம் மற்றும் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பும் அனுப்பப்பட்டது.

3) தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 18.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சை பெருவுடையார் திருக்கோவில் திருகுடமுழுக்கு விழா 05.02.2020ம் தேதி நடைபெற்றதை முன்னிட்டு, பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பிரதான சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகளில் சாலை குறியீடுகள் (Thermo Plastic Road Marking) அமைக்கும் பணிக்கு ரூ.20,00,000/– மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு. எஸ். கிருபாகரன், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரருக்கு 22.01.2020ம் தேதியன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி அன்னாரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிவுற்ற வகையில் அளவு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள செலவினத்தொகை ரூ.17,27,701/– க்கு பட்டியல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மாநகராட்சி நிதி நிலை சரியில்லாத காரணத்தினால் அன்னாருக்கு தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் 16.05.2024 அன்று வங்கி கட்டண வவுச்சர் எண்.BPV/107/24-25/RF/0000186 தேதி:16.05.2024–ன்படி தொகை செலுத்தப்பட்டது. மேலும் கீழ்கண்டவாறு உள்ள பணிகள் அன்னாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகளுக்கு அன்னாரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை திரும்ப வழங்ககோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் ஒப்பந்ததாரர் முன்வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிடக்கோரி விண்ணப்பித்தால் உடனடியாக பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

1) திருகுடமுழுக்கு விழாவினை முன்னிட்டு சாலை குறியீடு அமைக்கும் பணி.

2) அருள் ஜோதி நகர் போர்வெல் அமைக்கும் பணி.

3) தோப்புக்குளம் பகுதியில் போர்வெல் அமைக்கும் பணி.

4) விவேகானந்தா நகர் போர்வெல் அமைக்கும் பணி.

5) கவாடிக்காரத்தெரு போர்வெல் அமைக்கும் பணி.

6) திருவள்ளுவர் நகர் போர்வெல் அமைக்கும் பணி.

கீழ்கண்டவாறு உள்ள இரண்டு பணிகளுக்கு ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் 30.09.2024க்கு முன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

1. டேனியல் தாமஸ் நகர் பூங்கா,

2. தங்கம் நகர் மற்றும் தென்றல் நகர் பூங்கா.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.11.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 19.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தன்னால் ஆஜராக இயலவில்லை என தெரிவித்து உடன் பிறந்த தனது சகோதரர் திரு.எஸ்.சிவக்குமார் என்பவர் நேரடி விசாரணையில் ஆஜராகி வாக்குமூலத்தை சமர்ப்பிப்பார் என 15.11.2024 நாளிட்ட தனது மனுவில் தெரிவித்துள்ளார். மனுதாரர் சார்பாக ஆஜராகிய திரு.எஸ்.சிவக்குமார் என்பவர் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

1) திருகுடமுழுக்கு பணிக்கான டெண்டர்

மேற்கண்ட பணிக்கான முன் வைப்புத்தொகை ரூ.20,000/– கூடுதல் முன் வைப்புத்தொகை ரூ.20,000/– செயல் திறன் பாதுகாப்புத் தொகை ரூ.1,00,000/–. வழங்கப்பட வேண்டும். இவற்றில் செயல் திறன் பாதுகாப்புத் தொகையான ரூ.1,00,000/–த்தில் ரூ.86,355/– மட்டும் தஞ்சாவூர் மாநகராட்சியால் 15.11.2024 அன்று எனக்கு வழங்கப்பட்டது.

2) அருள்ஜோதி நகர் போர்வெல் பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ8,000/–, முன்வைப்புத்தொகை ரூ.8,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.40,000/– இன்னும் பெறப்படவில்லை.

3) தோப்புக்குளம் போர்வெல் பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ8,500/–, முன்வைப்புத்தொகை ரூ.8,500/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.42,500/– இன்னும் பெறப்படவில்லை.

4) தற்காலிக காய்கறி மார்கெட் பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ1,500/– முன்வைப்புத்தொகை ரூ.15,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.75,000/– இன்னும் பெறப்படவில்லை.

5) தற்காலிக காய்கறி மார்கெட் பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ,35,000/–, முன்வைப்புத்தொகை ரூ.35,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.1,75,000/– இன்னும் பெறப்படவில்லை.

6) விவேகானந்தர் நகர் போர்வெல் பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ8,000/–. முன்வைப்புத்தொகை ரூ.8,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.40,000/– இன்னும் பெறப்படவில்லை.

7) கவாடிக்கார தெரு பள்ளி சீரமைக்கும் பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ20,000/–, முன்வைப்புத்தொகை ரூ.20,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.1,00,000/– செயல் திறன் பாதுகாப்புத் தொகையான ரூ.1,00,000/–த்தில் ரூ.62,296/– மட்டும் தஞ்சாவூர் மாநகராட்சியால் 15.11.2024 அன்று எனக்கு வழங்கப்பட்டது.

8) திருவள்ளுவர் நகர் போர்வெல் அமைக்கும் பணி

இப்பணிக்கான முன் வைப்புத்தொகைரூ 8,500/– இன்னும் பெறப்படவில்லை.

9) டேனியல் தாமஸ் நகர் பூங்கா பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ50,000/–, முன்வைப்புத்தொகை ரூ.50,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.2,50,000/– இன்னும் பெறப்படவில்லை.

10) தங்கம் நகர் பூங்கா பணி

இப்பணிக்கான முன்வைப்புத் தொகை ரூ54,000/–. முன்வைப்புத்தொகை ரூ.54,000/– மற்றும் செயல் திறன் பாதுகாப்புத்தொகை ரூ.2,50,000/– இன்னும் பெறப்படவில்லை.

11) விவேகானந்தா நகர் பெரிய கோவில் குடமுழுக்கு விழா பணி

இப்பணிக்கு GST 6%,மற்றும் பெரிய கோவில் ரோடு மார்கிங் GST 6%.

மேற்கண்ட நிலுவைத் தொகையினை உடனடியாக தஞ்சாவூர் மாநகராட்சி வழங்கிட உரிய உத்தரவினை வழங்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6) தஞ்சாவூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 19.11.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

1) திருகுடமுழுக்கு பணிக்கான டெண்டர்

தஞ்சை பெருவுடையார் திருக்கோவில் திருகுடமுழுக்கு விழா 05.02.2020 அன்று நடைபெற்றது. மேற்கண்ட பணிக்காக பிரதான சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகளில் சாலைக்குறியீடுகள் அமைக்கும் பணிக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி திரு.எஸ்.கிருபாகரன் ஒப்பந்ததாரருக்கு 22.01.2020 பணியின் உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு அளவு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள செலவினத் தொகை ரூ17,27,701/– நிதி நிலை சரியில்லாத காரணத்தினால் தாமதமாக 16.05.2024 அன்று ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது.

மேலும் 5% வைப்புத் தொகை ரூ 86,385/– 15.11.2024 அன்று வழங்கப்பட்டது. மேலும் டேவணித் தொகை ரூ 20,000/– மற்றும் வைப்புத் தொகை ரூ 20,000/– ஐ 2024 – 2025 தணிக்கை முடிவு பெற்றவுடன் வழங்கப்படும்.

2) அருள்ஜோதி நகர் போர்வெல் பணி

இப்பணிக்கான வேலை உத்தரவு ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கிருபாகரனுக்கு 27.02.2019–ல் வழங்கப்பட்டது. பட்டியல் தொகையான ரூ 8,00,000/–தில் பிடித்தம் போக மீதித் தொகை ரூ.7,20,000/– 22.10.2019–ல் வழங்கப்பட்டது. அன்னாருக்கு வழங்க வேண்டிய 5% தொகை ரூ.40,000/– வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3) தோப்புக்குளம் போர்வெல் பணி

பணிக்கான வேலை உத்தரவு ஒப்பந்ததாரருக்கு 25.07.2019–ல் வழங்கப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய 5% தொகை ரூ42,500/–ஐ வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4) தற்காலிக காய்கறி மார்கெட் பணி

புதுக்கோட்டை ரோடு பகுதியில் SPCAக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சி குத்தகைக்கு பெறப்பட்ட இடத்தில் மேற்கண்ட பணிக்கு 05.11.2019ல் வேலை உத்தரவு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. மதிப்பீட்டு தொகையான ரூ.15,00,000/–தில் பிடித்தம் போக மீதி தொகை ரூ.13,50,000/– வழங்கப்பட்டு விட்டது. மேலும் 5% தொகை ரூ 75,000/–ஐ வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5) தற்காலிக காய்கறி மார்கெட் பணி

புதுக்கோட்டை ரோடு பகுதியில் SPCAக்கு சொந்தமான இடத்தில் மாநகராட்சி குத்தகைக்கு பெறப்பட்ட இடத்தில் 42 பணிக்கான வேலை உத்தரவு 05.11.2019–ல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. மதிப்பீட்டு தொகையான ரூ35,00,000/–தில் பிடித்தம் போக மீதி தொகை ரூ.31,50,000/– வழங்கப்பட்டு விட்டது. மேலும் 5% தொகை ரூ1,75,000/–ஐ வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6) விவேகானந்தா நகர் போர்வெல் பணி

இப்பணிக்கு ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு 10.03.2020ல் வழங்கப்பட்டது. இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ 7,95,849/–ல் பிடித்தம் போக ரூ 7,16,182/– 11.03.2021–ல் வழங்கப்பட்டுவிட்டது. 5% தொகையான ரூ 39,792/– வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7) கவாடிக்கார தெரு பள்ளி சீரமைக்கும் பணி

இப்பணிக்கு ரூ 20 இலட்சம் மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்ததாரருக்கு 25.02.2021–ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. பட்டியல் தொகை அனைத்தும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது. 5% தொகையான ரூ 68,296/– 15.11.2024 அன்று வழங்கப்பட்டது.

8) திருவள்ளுவர் நகர் போர்வெல் அமைக்கும் பணி

இப்பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ 8,50,000/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 25.07.2019ல் இப்பணி வழங்கப்பட்டது. ஆனால் இப்பணி இரத்து செய்யப்பட்டுவிட்டது. இந்த ஒப்பந்தப்புள்ளிக்காக செலுத்தப்பட்ட டேவணித் தொகை ரூ8,500/–ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9) டேனியல் தாமஸ் நகர் பூங்கா பணி

இப்பணிக்கு ரூ 50,00,000/– மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 30.06.2020–ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. பட்டியல் தொகையான ரூ.33,09,279/–ல் பிடித்தம் போக ரூ.29,60,000/– 13.07.2021–ல் வழங்கப்பட்டது. 5% தொகையான ரூ.2,50,000/– வழங்கப்படவேண்டும். இது குறித்து தணிக்கை தடை உள்ளதால், தணிக்கை தடை நிவர்த்தி செய்த பின் இத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10) தங்கம் நகர் பூங்கா பணி

இப்பணிக்கு ரூ 50,00,000/– மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 23.02.2021ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இப்பணிக்காக ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய 5% தொகையான ரூ.2,50,000/–ஐ வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11) விவேகானந்தா நகர் போர்வெல் அமைக்கும் பணி

இப்பணித் தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய GST 6% ஒரு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலே மனுதாரர் கோரியுள்ள நிலுவைத் தொகை அனைத்தும் ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் முன்பு தெரிவித்துக் கொள்கிறேன்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

தஞ்சாவூர் மாநகராட்சியில் ஒப்பந்தப்பணி செய்த வகையில் தனக்கு வரவேண்டிய முன் வைப்பு தொகை, கூடுதல் முன் வைப்புத்தொகை, செயல்திறன் பாதுகாப்பு தொகைகளை வழங்கிட கோரி மனுதாரர் புகார் அளித்துள்ளார்.

தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர், மனுதாரர் முன் வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிடக் கோரி விண்ணப்பித்தால் உடனடியாக பரிசீலிக்கப்படும் எனவும், டேனியல் தாமஸ் பூங்கா மற்றும் தங்கம் நகர் மற்றும் தென்றல் நகர் பூங்கா பணிகளுக்கு 30.09.2024–க்குள் தொகை திருப்பிச் செலுத்தப்படும் என தெரிவித்துள்ளார். தஞ்சாவூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் இறுதியாக மனுதாரர் கோரியுள்ள நிலுவைத் தொகை அனைத்தும் ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் தஞ்சாவூர் மாநகராட்சியிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகை தொடர்பாக இது வரை விண்ணப்பிக்காமல் இருந்தால் மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி செயற்பொறியாளர் இருவரும் இம்முறைமன்ற நடுவத்தில்

தெரிவித்துள்ளப்படி உரிய சட்ட விதிகளுக்கு உட்பட்டு மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை ஒரு மாத காலத்திற்குள் வழங்கிட உரிய நடவடிக்கையினை விரைந்து எடுக்க தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

**1)** திரு. S.கிருபாகரன்,
நெ.5/31, பாண்டியன் நகர்,
M.C. ரோடு,
தஞ்சாவூர்–613 007.

2) ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர், சென்னை 32
இகோ/உதிரி

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

சட்ட ஆலோசகர் / செயலாளர் (FAC).

13/12/24